**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்**

2025 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 13 ஆம் நாள் வெள்ளிக்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி.க. இந்துமதி, கிரேடு III பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 35/2022 வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அமுதா | வயது | : 46 |
| க.பெ | : சிவானந்தம் | தாலுக்கா | : போளூர் |
| கிராமம் | : புலவன்பாடி | தொழில் | : கூலி |

**13.06.2025 – வா.சா.1 முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 2 ம் வாதி ஆவேன். நான் எனது முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். அதில் உள்ள விவரங்கள் அனைத்தும் விவங்களும் உண்மை.

கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 28.03.1959 தேதியிட்ட வாதிகளின் தந்தை அண்ணாமலை கிரயம் பெற்ற கிரயப்பத்திர சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. வழக்கு சொத்து குறித்து அண்ணாமலை அவர்களின் பெயரில் உள்ள பசலி சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 11.05.1976 தேதியிட்ட கிரயப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 09.05.1969 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. போளூர் வட்டாட்சியர் அவர்களின் காலம் சென்ற அண்ணாமலை மற்றும் அவரது மனைவி முனியம்மாள் ஆகியோருக்கு கொடுக்கப்பட்ட வாரிசு சான்றிதழ் நகல் (சான்றிட்ட நகலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 13.03.2008 தேதியிட்ட கிரயப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. போளூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட 05.01.1976 முதல் 20.07.2021 வரை உள்ள வில்லங்க சான்று நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. கண்ணையன் மகன் ரவிச்சந்திரன் பெயரில் பட்டா எண்.375 நகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. 07.07.2021 தேதியிட்ட கிரயப்பத்திர சான்றிட்ட நகல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. 21.07.2021 தேதியிட்ட பிரதிவாதிகள் 1 மற்றும் 2 மற்றும் 4 முதல் 8 அவர்களுக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. மேற்படி அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பிற்கான அஞ்சலக இரசீதுகள் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12. மேற்படி அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பினை 6 வது பிரதிவாதி மற்றும் 8 வது பிரதிவாதி அவர்கள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை அசல் (2 எண்ணிக்கை) வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

13. 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்ட மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு Refused என்று திருப்பப்பட்ட அஞ்சல் உறை (2 எண்ணிக்கை) வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

14. 10.01.2022 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

15. பாண்டுரங்கன் மனைவி அனுசியா மற்றும் மகன் திவாகர் சர்மா அவர்களின் பெயரில் உள்ள முறையே பட்டா எண்.927 மற்றும் 928 நகல்கள் (2 எண்ணிக்கை) வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்கண்ட ஆவணங்களை குறியீடு செய்து இந்த வழக்கை அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முதல் விசாரணை முடிவடைந்தது.

Sd/- B. Salma,
District Munsiff,
Polur.